வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 21.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

2 நாள் அரசு முறைப் பயணமாக இன்று குவைத் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

வடகிழக்கு மாநிலங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களை மத்திய அரசு ஊக்குவிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

புதுச்சேரி மீனவர் நலன் மற்றும் மீன் வளத்துறையானது மீனவர்களுக்கு உதவும் வகையில் efforts என்ற செயலியை வடிவமைத்துள்ளது.

அகத்தியர் பிறந்த நாள் வரும் 23-ஆம் தேதி திங்கட்கிழமை சித்த மருத்துவ தினமாக கொண்டாடப்பட உள்ளது.

மோடி

2 நாள் அரசு முறைப் பயணமாக இன்று குவைத் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அந்நாட்டில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் கலை நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பான வரவேற்பு அளித்தனர். அங்கு வாழும் 101 வயதான முன்னாள் ஐ எப் எஸ் அதிகாரியான திரு மங்கல் சைன் ஹந்தாவை பிரதமர் சந்தித்தார். குவைத் பட்டத்து இளவரசர் அல் அஹமத் அல் ஜாபர் அல் சபாவின் அழைப்பை ஏற்று திரு மோடி அங்கு சென்றுள்ளார். கடந்த 43 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் குவைத் செல்வது இதுவே முதல் முறையாகும்.

Bayan அரண்மனையில் பிரதமர் திரு மோடிக்கு அணி வகுப்பு மரியாதை செலுத்தப்பட உள்ளது. அதன் பின்னர் அவர் உயர்மட்ட பேச்சு வார்த்தை மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் ஷேக் ஷாத் அல் அப்துல்லா விளையாட்டு வளாகத்தில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் புலம் பெயர்ந்த இந்தியர்களுடன் அவர் உரையாட உள்ளார்.

*அமித் ஷா*

அகர்தலாவில் இன்று நடைபெற்ற வடகிழக்கு கவுன்சிலின் 72-ஆவது கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, உரையாற்றினார். அப்போது கடந்த 10 ஆண்டுகளாக வடகிழக்கு மாநிலங்களுக்கு முக்கியத் துவம் அளிக்கும் வகையிலும் அவற்றின் வளர்ச்சியிலும் பிரதமர் திரு நரேந்திர மோடி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார். இம்மாநிலங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களை மத்திய அரசு ஊக்குவிப்பதாகவும் தெரிவித்த திரு அமித் ஷா இந்த பிராந்தியங்களில் அமைதியை நிலை நாட்டுவது மிகவும் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா இம்மாநிலங்களில் உள்துறை அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் காரணமாகவே தீவிரவாத நடவடிக்கைகள் 71 சதவிகிதமும் மனித உயிரிழப்பு 60 சதவிகிதமும் குறைந்துள்ளதாக கூறினார்.

*சிவராஜ் சிங் சவ்கான்*

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவ்கான் கூறி உள்ளார். சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர் வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். கொப்பரை தேங்காய் கொள்முதலுக்கான, குறைந்த பட்ச ஆதரவு விலை கொள்கைக்கு, மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளதை அவர் சுட்டிக் காட்டி உள்ளார்.

விவசாயிகளின் சார்பில் பிரதமருக்கு தாம் நன்றி தெரிவித்து கொள்வதாகவும் அமைச்சர் கூறி உள்ளார்.

*பூபேந்தர் யாதவ்*

நாட்டின் வனப் பரப்பு குறித்த அறிக்கையை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திரயாதவ் இன்று டேராடூனில் வெளியிட்டார். 1987-ஆம் ஆண்டு முதல் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது. இன்று வெளியிடப்பட்ட 18-ஆவது அறிக்கையில் வனப்பகுதி, மரங்களின் அடர்த்தி, சதுப்பு நில காடுகள், வேளாண் காடுகள் உள்ளிட்டவை பற்றிய தகவல்கள் உள்ளன. 2021-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நாட்டின் மொத்த வனம், மரங்களின் பரப்பளவு ஆயிரத்து 445 சதுர கிலோமீட்டர் அதிகரித்துள்ளதாக அமைச்சர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

*பாரத் நெட்*

பாரத் நெட் திட்டத்தின் கீழ் இதுவரை 2 லட்சத்திற்கும் அதிகமான கிராம பஞ்சாயத்துக்கள் பயன் அடைந்துள்ளதாக மத்திய அரசு கூறி உள்ளது. ஊரகப் பகுதிகளில் அதி விரைவு இணைய தள சேவையை வழங்கும் வகையில் 2011-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், சிறு கிராமங்களுக்கும் இணைய தள சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான திருத்தி அமைக்கப்பட்ட திட்டம் 1 லட்சத்து 39 ஆயிரத்து 579 கோடி ருபாய் செலவில் செயல்படுத்தப் படவுள்ளதாக இத்துறையின் செய்தி குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*தியான தினம்*

உலக தியான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இதனை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, விடுத்துள்ள செய்தியில் நாட்டு மக்கள் அனைவரும் தியானப் பயிற்சி மேற்கொள்வதை தினசரி நடவடிக்கைகளில் ஒன்றாக பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான வலுவான சக்தி தியானம் என்றும், பிரதமர் கூறி உள்ளார்.

ஐக்கிய நாடுகள் சார்பில் அறிவிக்கப்பட்டு முதல் முறையாக கொண்டாடப்படும் இந்நாளை ஒட்டி, நியுயார்க்கில் உள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 600-க்கும் மேற்பட்டோர்

பங்கேற்றனர். **உலகளாவிய அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு தியானம்** என்ற கருப்பொருளுடன் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

*மலேரியா*

மலேரியா பாதிப்பை குறைப்பதில் இந்தியா பெரிய அளவில் வெற்றி பெற்றிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது 69 சதவிகிதம் அளவிற்கு மலேரியா பாதிப்பு குறைந்துள்ளதாகவும், மலேரியாவால் ஏற்படும் உயிரிழப்புகள் 68 சதவிகிதம் அளவிற்கு குறைந்துள்ளதாகவும் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த அமைப்பு கூறி உள்ளது.

*மீன் வளத்துறை செயலி*

புதுச்சேரி மீனவர் நலன் மற்றும் மீன் வளத்துறையானது மீனவர்களுக்கு உதவும் வகையில் efforts என்ற இணைய தளத்தை வடிவமைத்துள்ளது. இந்த செயலியை புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் கடந்த 14-ஆம் தேதி நடைபெற்ற விழா ஒன்றில் அறிமுகம் செய்து வைத்தனர். இந்த செயலி மூலம் மீனவர்கள் தங்களுக்கான நலத் திட்ட உதவிகளை எளிதாக பெற முடியும் என்று புதுச்சேரி மீன்வளத்துறையின் இணை இயக்குநர் திரு தெய்வசிகாமணி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் நமது செய்தி பிரிவுக்கு அளித்த சிறப்பு பேட்டியில் கூறுகையில் …………

(வாய்ஸ்)

*குற்றத் தடுப்பு பிரிவு*

புதுச்சேரியில் இணைய வழி குற்றத் தடுப்பு பிரிவு காவல் நிலையத்தில் பொது மக்கள் குறை தீர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. காவல் கண்காணிப்பாளர் திரு பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 60-க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு, தங்களுடைய கருத்துக்களையும், குறைகளையும் தெரிவித்தனர். இதுகுறித்து கூடுதல் தகவல் தருகிறார் எமது செய்தியாளர்……. (வாய்ஸ்)

சித்த மருத்துவ தினம்

அகத்தியர் பிறந்த நாள் வரும் திங்கட்கிழமை 23-ஆம் தேதி சித்த மருத்துவ தினமாக கொண்டாடப்பட உள்ளது. இதன் முன் நிகழ்வாக புதுச்சேரி அரசு ஆயுஷ்துறையின் கீழ் இயங்கும் சித்த மருத்துவ பிரிவைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் சார்பாக இருசக்கர விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. சட்டப்பேரவை வளாகத்தில் இருந்து புறப்பட்ட இப்பேரணியை முதலமைச்சர் திரு ரங்கசாமி கொடி அசைத்து தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு ஆயுஷ்துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீதரன் மற்றும் வில்லியனூர் ஆயுஷ் மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளரும். தலைமை சித்த மருத்துவருமான டாக்டர் எஸ் இந்திரா உள்ளிட்டோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர். இப்பேரணி சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, அண்ணா சாலை வழியாக ஒதியஞ்சாலை நலவழி மையத்தை சென்றடைந்தது.

கிரிக்கெட்

3 ஒருநாள் போட்டிகள் கொண்ட மகளிர் ஐசிசி சேம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டம் நாளை இந்தியா-வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கு இடையே இந்திய நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு வதோதராவில் நடைபெற உள்ளது.

பளுதூக்கும் போட்டி

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அஸ்மிதா தோன் வெண்கலப் பதக்கம் வென்றார். தோகாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 49 கிலோ எடை பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார். இப்போட்டியில் மகளிர் ஜுனியர் பிரிவில் பாயல் 2 வெண்கலப் பதக்கங்களை வென்றார்.

சீனாவில் ஹைனானில் நடைபெற்ற ஆசிய படகு சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணு சரவணன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

வானிலை

வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்தது. இதை அடுத்து சென்னை, புதுச்சேரி, கடலூர், நாகை, பாம்பன் உள்ளிட்ட 9 துறை முகங்களில் 1-ஆம் எண் புயல்

எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக நாளை முதல் 4 நாட்களுக்கு தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

2 நாள் அரசு முறைப் பயணமாக இன்று குவைத் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

வடகிழக்கு மாநிலங்களில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களை மத்திய அரசு ஊக்குவிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

புதுச்சேரி மீனவர் நலன் மற்றும் மீன் வளத்துறையானது மீனவர்களுக்கு உதவும் வகையில் efforts என்ற செயலியை வடிவமைத்துள்ளது.

அகத்தியர் பிறந்த நாள் வரும் 23-ஆம் தேதி திங்கட்கிழமை சித்த மருத்துவ தினமாக கொண்டாடப்பட உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 21.12.2024/Script.

------------------------